# நிதியியல் மோசடிகள்:
# சொர்க்கத்தில் மறைந்திருக்கும் நரகம்



நிதியியல் மோசடிகள் பற்றிய சிற்றேடு
இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவினால் வெளியிடப்பட்டது


මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**நிதியியல் மோசடிகள்:**

# சொர்க்கத்தில் மறைந்திருக்கும் நரகம்

இலங்கை மத்திய வங்கியின்
நிதியியல் உளவறிதல் பிரிவு

உருச்சித்திரம் - அனுர சிறிநாத்

ISBN 978-624-5917-52-5

2023 செத்தெம்பர்

பொலிஸ் நிலையத்தில்.....



பொதி மோசடி
பக்கங்கள் 1-2
லொத்தர் மோசடி
பக்கம் 3
தொழில் மோசடி
பக்கம் 4
காதல் மோசடி
பக்கங்கள் 5-6
பொருட்கள்/சேவைகள் மோசடி
பக்கங்கள் 7-8
அறப்பணி மோசடி
பக்கங்கள் 9-10
ஆள்மாறாட்டம்/ அடையாளத் திருட்டு
பக்கங்கள் 11-12
மறைகுறி நாணய மோசடி
பக்கம் 13

# பொதி மோசடி

அமல் 30 வயதுடையவர் தனியார் கம்பனியில் பணியாற்றுகின்றார். வாடகை தங்குமிடத்திலிருந்து வாழ்க்கையை ஓட்டுவதற்கான சராசரி வருமானத்தை உழைப்பவராவார். ஒருநாள் அமலின் தொலைபேசிக்கு குறுந்தகவலொன்று கிடைக்கப்பெறுகின்றது.







மல் தனது பொதியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ரூ.30,000 வைப்பிலிடுகின்றார். அவர் உண்மையாகவே பொதியினை வென்றுள்ளார் என்ற நம்பிக்கையின் காரணமாக இதனை உறுதிப்படுத்திக்கொள்ளவதற்கு அனுப்பியவருக்கு அழைப்பை ஏற்படுத்தவோ அல்லது குறுந்தகவல் அனுப்பவோ இல்லை.






## பொதி மோசடியின் சிறப்பியல்புகள்

1. தங்கம், ஆபரணம் அல்லது பணம் போன்றவற்றை உள்ளடக்கிய பெறுமதிமிக்க பொதியொன்றினை நீங்கள் வென்றுள்ளீர்கள் என உங்களுக்கு அறிவிக்கின்ற குறுந்தகவல், தொலைபேசி அழைப்பு அல்லது மின்னஞ்சல் கிடைக்கப்பெறுதல். இத்தகவல் பொதுவாக இலக்கணப் பிழையுடையதாகவும் பொதியில் உள்ளடங்கியுள்ள பெறுமதிவாய்ந்த பொருட்களின் படங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.

2. பொதியினைப் பெற்றுக்கொள்வதற்கு முடிந்தவரை விரைவாக பணத்தை வைப்பிலிடக் கோருதல்.



# லொத்தர் மோசடி

ரங்க 25 வயதுடைய அரசாங்க நிறுவனமொன்றில் பணியாற்றுபவராவார். அவர் தனது திருமணத்திற்கு தயாராவதுடன் ஒருநாள் BMW ஒன்றை வென்றுள்ளார் எனக் குறிப்பிட்டு BMW USA இடமிருந்து மின்னஞ்சல் ஒன்றைப் பெற்றுக்கொள்கின்றார்.

BMW வெற்றியாளர்
2023 சனவரி 01, 10.13 மு.ப
From : BMWannuallottery@gmail.com
To : ranga@gmail.com

அன்பார்ந்த அதிஷ்டசாலிஇ

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து ஐ.அ.டொலர் 1.5 மில்லியன் பெறுமதியுடைய புத்தம் புதிய BMW கார் ஒன்றை வென்றுள்ளீர்கள் என்பது பற்றி உங்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து david@gmail.com வாயிலாக எமது இலங்கைக்கான முகவரான டேவிட் என்பவரைத் தொடர்புகொள்ளுங்கள்.



ரங்க வாகனக் கடனொன்றினைப் பெறுவதற்கு இதுவரையிலும் தகைமை பெறவில்லை என்பதனால் பரவஸப்படுகின்றார். இது கனவொன்று நனவாகியது போல் இருப்பதுடன் மிகவும் ஆர்வத்துடன் டேவிட்டுக்கு பதிலனுப்பி பின்வரும் பதிலையும் பெற்றுக்கொள்கின்றார்.

BMW வெற்றியாளர்
2023 சனவரி 01, 11.30 மு.ப
From : david@gmail.com
To : ranga@gmail.com

அன்பார்ந்த அதிஷ்டசாலிஇ

நீங்கள் உடனடியாக பதிலனுப்பியமைக்கு மிகவும் நன்றி. நாம் இதனை கப்பலில் அனுப்பும் செயன்முறையினை முன்னெடுத்து வருகின்றோம் தயவுசெய்து XXX XXX. என்ற வங்கிக் கணக்கிற்கு கப்பற் செலவாக ரூபா. 120,000 வைப்பிலிடுங்கள்.

**2023 சனவரி 06, 02.44 பி.ப.**

உங்களது BMW இலங்கையை வந்தடைந்துள்ளது அப்புறப்படுத்துவதற்காக இலங்கை சுங்கத்தில் அது காத்திருக்கின்றது. அப்புறப்படுத்தல் கட்டணமாக தயவுசெய்து ரூ. 100,000 வைப்பிலிடுங்கள்.

**2023 சனவரி 08, 09.15 மு.ப.**

உங்களது BMW அப்புறுப்படுத்தப்பட்டு உங்களது வாசல்படியில் ஒப்படைப்பதற்குத் தயாராகவுள்ளது. போக்குவரத்து கட்டணங்களாக தயவுசெய்து ரூ.50,000 வைப்பிலிடுங்கள்.

ரங்க சந்தேகப்படத் தொடங்குகின்றார் BMW காரைப் பெற்றுக்கொள்வதற்கு ரங்க ஏறத்தாழ ரூ.400,000 வைப்புச்செய்துவிட்டார். அவர் தனது கரிசனையினை மின்னஞ்சலாக அனுப்புகின்றார். ஆனாலும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

## லொத்தர் மோசடி சிறப்பியல்புகள்

1. BMW ஒன்றை அல்லது லொத்தர் பரிசு ஒன்றை நீங்கள் வென்றுள்ளீர்கள் என அறிவித்து குறுந்தகவல், தொலைபேசி அழைப்பு அல்லது மின்னஞ்சல் கிடைக்கப்பெறுதல்.

2. கப்பற்செலவுகள், அப்புறப்படுத்தல் கட்டணங்கள், போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றுக்கு பல சந்தர்ப்பங்களில் பணத்தை வைப்பிலிடக் கோருதல்.



# தொழில் மோசடி

இசுறு மற்றும் சச்சினி ஆகியோர் 21 வயதுடைய சகோரனும் சகோதரியும் ஆவர். தொழிலுக்காக வெளிநாட்டுக்குச் செல்வது இசுறுவின் கனவாகும். கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக சச்சினி அண்மையில் அவளது தொழிலை இழந்து வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பொன்றைத் தேடிக்கொண்டிருக்கின்றாள். இருவரும் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் தொழில்வாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்கின்றனர். ஒருநாள் சச்சினிக்கு நிறுவனமொன்றிலிருந்து அழைப்பு வந்து தொழிலொன்றைத் தருவதாக கூறுகின்றனர்.







இரு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இசுறுவும் சச்சினியும் ரூ.150,000 இனை வைப்பிலிடுகின்றனர். ஆனால், தொழில் வழங்குநரை தொடர்புகொள்ள அவர்கள் முயற்சித்த போது, பதில் எதுவும் கிடைக்கவில்லை.




## தொழில் மோசடியின் சிறப்பியல்புகள்

1. கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மிக விரைவாகவும் இலகுவாகவும் தொழில்வாய்ப்புக்களை முன்வைத்தல்.
2. மடிக்கணனிகள், Wi-Fi, மற்றும் ரவுட்டர் போன்ற சாதனங்களை வழங்குவதற்கு அல்லது வெளிநாட்டுத் தொழிலுக்கான ஆவணங்களை தயார்படுத்தி செயன்முறைப்படுத்துவதற்கு பணம் வைப்பிலிடுமாறு கோருதல்.



# காதல் மோசடி

இந்தி 36 வயதுடைய ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்கின்ற பணக்கார பெண்ணாவாள் இவர் சமூக வலைத்தளங்களில் முனைப்புடன் ஈடுபடுபவள் தனது வாழ்க்கை பற்றி பொதுவாக முகநூலில் கிரமமாகப் பதிவிடுகின்றாள். எட்வேட் எனும் வெளிநாட்டவர் இந்தியுடன் முகநூலில் நட்புக் கொள்கின்றார். காதல் மலர்கின்றது. எட்வேட் அவளைத் திருமணம் செய்வதற்கு அவரது விருப்பத்தைத் தெரிவிக்கின்றார். அவரது இலங்கையிலுள்ள நண்பரிலொருவரான சுராஜ் என்பவரை ஒப்பந்ததாரராக பணிக்கமர்த்தி வீடொன்றைக் கட்டுவதற்கு அவர் திட்டமிடுகின்றார்.












இந்தி பணத்தை வைப்புச்செய்த பின்னர் சுராஜ், எட்வேட் இருவரும் பதிலளிக்காது விட்டுவிட்டனர். இந்தி அவளது பணத்தையும் காதலையும் தொலைத்து மன அழுத்தம் அடைந்துள்ளார்.



## காதல் மோசடியின் சிறப்பியல்புகள்


1. தெரியவே தெரியாத ஒருவர் காதல், அன்பு மற்றும் அழகான வாழ்க்கை என்பவற்றுக்கு உங்களுக்கு வாக்குறுதியளிப்பார்.

2. வெளிநாட்டவர் அல்லது வெளிநாட்டில் வாழ்கின்ற உள்நாட்டவர் இதில் ஈடுபடுவார் ஆகையினால் அவரை அல்லது அவளை நீங்கள் நேரடியாக சந்திக்க முடியாது.

3. வீடொன்றைக் கட்ட, திருமண நிகழ்வை ஏற்பாடு செய்ய அல்லது புலம்பெயர பணம் கோருதல்.

# பொருட்கள்/சேவைகள் மோசடி

அபி 40 வயதுடைய இசையமைப்பாளராவார். இசை நிகழ்ச்சியொன்று நடக்கவிருக்கின்றது அவர் ட்ரம் இசைக்கருவியை தேடிக்கொண்டிருக்கின்றார். இணையத்தளத்தில் ட்ரம் கருவிகளை விற்பனைசெய்யும் விளம்பரமொன்றைப் பார்க்கின்றார்.



அபி விற்பனையாளர் வழங்கிய அமைவிடத்திற்குச் செல்கின்றார். ஆனாலும் அது பொய்யான விலாசமென உணர்ந்து தான் ஏமாற்றப்பட்டதை அறிகின்றார்.




## பொருட்கள்/சேவைகள் மோசடியின் சிறப்பியல்புகள்

1. விற்பனைக்காகக் கிடைக்கின்ற பொருள் அல்லது சேவை நம்பமுடியாதளவு சிறப்பானதாகத் தோன்றும்.

2. பொருளை அல்லது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு அவசரமாக முற்பணத்தைச் செலுத்துமாறு கோரப்படும்.

# இணையவழிக் கொள்வனவையும் கொடுப்பனவுச் செயலிகளையும் பயன்படுத்துகின்ற மோசடி

சத்யா, 18 வயதுடைய இளம்பெண். அடிக்கடி இணையவழி கொள்வனவில் ஈடுபடுபவள். அவள் அதில் முற்றிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதுடன் ஒவ்வொரு நாளும் பல கொள்வனவுக் கட்டளைகளை முன்வைக்கின்றாள். ஆரம்பத்தில், சத்யா இணையவழிக் கொள்வனவுக்காக பிரபல்யமான இணையத்தளங்களைப் பயன்படுத்துகின்றாள். காலப்போக்கில் பிரபல்யமிக்க வர்த்தக நாமங்களைக் கொண்ட பொருட்களை மிகவும் குறைந்த விலையில் தருகின்ற புதிய இணையவழி விற்பனையாளர்களிடம் கொள்வனவு கட்டளைகளை முன்வைக்க ஆரம்பிக்கின்றாள். அவள், பல கொள்வனவுக் கட்டளைகளை முன்வைக்கின்றாள் இருப்பினும், பொருட்கள் விநியோகம் முன்னரை விட தாமதமடைவதை உணர்கின்றாள்.



வேறு இடத்தில் வசித்த தனது தாயான சுதர்மாவையும் (55 வயது) இணையவழி கொள்வனவிற்கு அறிமுகப்படுத்துகின்றாள். அவளைப் போன்றே, சுதர்மாவும் அதில் குறைந்த விலையில் சாரிகளை கொள்வனவு செய்வதற்கான சலுகையைக் கண்டு கொள்வனவு கட்டளையை முன்வைக்கின்றாள். அடுத்தநாள், கொள்வனவுக்கான கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான முறையொன்று உள்ளதாக விற்பனையாளர் அவளுக்கு தொலைபேசி மூலம் கூறி அவரது கணக்கு இலக்கம், தனிப்பட்ட விபரங்கள், மற்றும் கிடைக்கப்பெறப்பட்ட ஒரு தடவை கடவுச்சொல் (OTP) ஆகிய விபரங்களை அவளிடம் கோருகின்றார். சுதர்மா தனது விபரங்களை தயக்கமின்றி கொடுத்துவிடுகின்றாள்.



பல வாரங்களின் பின்னர், சுதர்மாவின் கணக்கு இலக்கம் தொடர்பாக பல வாடிக்கையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என வங்கியிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பூடாக அறிகின்றாள். அவள் வங்கிக்கு விரைந்து, பல்வேறு நோக்கங்களுக்காக வேறு ஆட்கள் தொழிற்படுத்தியிருந்த கொடுப்பனவு செயலியுடன் தனது கணக்குடன் இணைக்கப்பட்டிருந்ததை அவள் அறிந்துகொண்டாள் இதில் சில மோசடிகளும் அடங்கியிருந்தன.

அதேசமயத்தில், சில பொருட்களை வாங்குவதற்கான அண்மையில் முன்வைத்த கட்டளைகளுக்கான பொருட்கள் இன்னமும் விநியோகிக்கப்படவில்லை என்று சத்யா சுதர்மாவிற்கு அழைப்பினை ஏற்படுத்தி முறையிடுகின்றாள்.








## இணையவழிக் கொள்வனவையும் கொடுப்பனவுச் செயலிகளையும் பயன்படுத்துகின்ற மோசடிகளின் முக்கிய பண்புகள்

1. பிரபல்யமான வர்த்தக நாமங்களைக் கொண்ட பொருட்களை குறைந்த விலைகளில் வழங்குதல்
2. வியாபாரம் மற்றும் அதன் நம்பகத்தன்மை பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களுடன் வெளிநாடுகளில் அமைந்துள்ள ஒப்பீட்டளவில் புதிய இணையவழி விற்பனை நிலையங்கள்
3. மறைகுறி நாணயங்கள் போன்ற கண்டுபிடிக்க மற்றும் திரும்பல்செய்ய கடினமாகவுள்ள முறைகளில் கொடுப்பனவுகளை கோருதல்
4. ஒரு தடவை கடவுச்சொல்/தனிப்பட்ட அடையாள இலக்கம் (ஜஐடீ) போன்ற இரகசியமான நிதியியல் விபரங்களை கோருதல்.

# ஆள்மாறாட்டம்/அடையாளத் திருட்டு

62 வயதுடைய மொஹமட் இல்லத்தரசியான அவரது மனைவி பாத்திமாவுடன் வாழ்ந்துவருகின்ற ஓய்வூதியகாரர் ஒருவராவார். அவர்களது வருமானத்திற்கான ஒரேயொரு வழிமூலம் மொஹமட்க்குக் கிடைக்கின்ற ஓய்வூதியமே ஆகும். உயர்வடைகின்ற பணவீக்கம் அவர்களை வெகுவாகப் பாதித்தும் இருந்தது. ஒருநாள் புறக்கோட்டையில் பொருட்கள் கொள்வனவு செய்திருக்கின்ற வேளையில் லால் என்பவர் மொஹமட்டை அணுகினார்.






## ஆள்மாறாட்டம்/அடையாளத் திருட்டு பற்றிய சிறப்பியல்புகள்


1. நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை இலக்கம், வங்கிக் கணக்கு விபரங்கள், பற்று அட்டைகள், கடனட்டைகள் போன்ற உங்களது தனிப்பட்ட தகவல்களை இனந்தெரியாத நபர் கோருதல்.


2. மேலே சொல்லப்பட்ட தனிப்பட்ட விபரங்கள் ஒன்றில் திருடப்படுதல் அல்லது சம்மதத்துடன் பெற்றுக்கொள்ளப்படுதல்.



# மறைகுறி நாணய மோசடி

சூரியாவும் சந்திராவும் 28 வயதுடைய சிறந்த நண்பர்கள். இருவரும் தொழில்நுட்பத்தால் கவரப்பட்டு மறைகுறி நாணய முதலீட்டிற்காக இணையத்தில் வாய்ப்பினைத் தேடுகின்றனர்.







## மறைகுறி நாணய மோசடியின் சிறப்பியல்புகள்

1. வழமையான மோசடியொன்றாக இடம்பெறக்கூடும் இதில் தொடக்க முதலீடு இழந்துபோகும்.

2. பிரமிட் திட்டமொன்றாக இது இருக்கலாம். இதில் நீண்டகாலத்தின் பின்னர் ஈடுகொடுக்கமுடியாத இழப்புகள் ஏற்படும்.


# செய்யவேண்டியவையும் செய்யக்கூடாதவையும்

## செய்யவேண்டியவை

- கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் எப்போதும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துங்கள்.
- தனிப்பட்ட விபரங்களை அறிந்த தரப்பினருடன் மாத்திரம் பாதுகாப்பாக பகிருங்கள்.
- சந்தேகத்திற்கிடமான, இனந்தெரியாத மின்னஞ்சல், குறுந்தகவல்கள், இணைய இணைப்புகள், திரையில் தோன்றும் வின்டோக்கல் போன்றவற்றை கையாளும் போது எச்சரிக்கையாக இருங்கள்.
- ஏதேனும் சந்தேகமான நிதியியல் நிலைமையில் உங்களது குடும்பம், வயது முதிந்தோர், நெருங்கிய நண்பர்கள் மற்றும் அதிகாரிகள் போன்றோருடன் பகிருங்கள் மற்றும் உதவியை நாடுங்கள்.
- செயலிகள், ஒருதடவை கடவுச் சொற்கள் (OTPs), QR குறியீடுகள், பற்று/கடன் அட்டைகள் போன்றன பற்றி நிதியியல் அறிவினை நீங்களாகவே வளர்த்துக் கொள்ளுங்கள்.
- நிதியியல் உலகில் பிந்திய சாதகமான, பாதகமான போக்குகள் பற்றி சமகால அறிவுடன் இருங்கள்.

## செய்யக்கூடாதவை

- வங்கிக் கணக்கு விபரங்கள், பற்று/கடன் அட்டை விபரங்கள், ஒருதடவை கடவுச் சொற்கள் (OTPs) போன்ற தனிப்பட்ட நிதியியல் தகவல்களை அறியாத தரப்பினருக்கு வெளிப்படுத்த வேண்டாம்.
- தேசிய அடையாள அட்டை, பற்று/கடன் அட்டைகள், வங்கிப் புத்தகங்கள் போன்ற தனிப்பட்ட ஆவணங்களை இனந்தெரியாதவர்களுக்கு கையளிக்க வேண்டாம்.
- முன்கூட்டியே உறுதிப்படுத்தாது தெரியாதவர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள அல்லது பார்க்காது பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டாம்.
- முகநூல், இன்ஸ்டகிறாம், யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் மிக அதிகமாக தனிப்பட்ட தகவல்களைப் பகிரவேண்டாம்.
- அறியாத/சந்தேகத்திற்கிடமான இணைய இணைப்புக்களை மற்றும் மின்னஞ்சல்களை கிளிக்செய்ய/திறக்க வேண்டாம்.
- தனியே அல்லது ஆராயாமல் இயங்க வேண்டாம்.


பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுதல்...
**இலவசமாகக் கிடைப்பதற்கு எதுவுமில்லை.** நிதியியல் மோசடியொன்றில் வாக்குறுதியளிக்கப்படும் நன்மைகள் தொடக்கத்தில் கவர்ந்திழுக்கக்கூடியதாயினும் இறுதியில் வருந்துவதற்கு வழிவகுக்கும். ஆகையினால், நிதியியல் மோசடிகளிலிருந்து நீங்களாகவே பாதுகாத்துக்கொள்ள தயவுசெய்து அனைத்து முயற்சிகளையும் எடுங்கள்.
**சந்தேகமாகவுள்ள போது, ஏன் என வினவுங்கள்?** வினாக்களைத் தொடுப்பது நிதியியல் மோசடியொன்றிலிருந்து நீங்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும். இனந்தெரியாத ஒருவருக்கு பணம் தருவதற்கு முன்னர் ஏன் என வினவுங்கள். உங்களது பற்றுஃகடன் அட்டை விபரங்களை நீங்கள் பகிர்வதற்கு முன்னர் ஏன் எனக் கேளுங்கள்.
**இல்லை என கூறக் கற்றுக்கொள்ளுங்கள்.** மோசடிக்காரர்கள் உங்களது நம்பிக்கையும் அனுதாபத்தையும் பெற்றுக்கொள்வதில் தலைசிறந்தவர்கள். மக்களின் உணர்வுகளுடன் விளையாடுவதில் அவர்கள் சிறந்தவர்கள். உணர்வு ரீதியானவற்றை எதிர்கொள்கின்ற போது இல்லையெனக் கூறும் தைரியத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.
நிதியியல் மோசடியொன்றினால் நீங்கள் பாதிக்கப்படுவீர்களாயின் முடிந்தவரை விரைவாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுங்கள். வங்கிக் கணக்கொன்று தொடர்புபடுமாயின் தொடர்புடைய வங்கிக்கு நிதியியல் மோசடி பற்றி தெரிவியுங்கள். **ஆனாலும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். வருமுன் காப்பதே சிறந்தது என்பதனால் நிதியியல் மோசடிகளுக்குள் விழாமல் இருப்பது அறிவுபூர்வமானதாகும்!!!**

# இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவிடமிருந்தான செய்தி

உங்களது நிதிகளின் பாதுகாப்பையும் தீங்கற்றநிலையையும் உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவிலுள்ள நாம் உறுதிபூண்டுள்ளோம். அண்மைக் காலத்தில், தனிநபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மீது கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் பல்வேறு நிதியியல் மோசடிகள் அதிகரித்து வருவதை நாம் அவதானித்துள்ளோம். இம்மோசடிகள் தொடர்பில் விழிப்பூட்டலை ஏற்படுத்தி, இதுபோன்ற மோசடிகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல் உங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான அறிவை வழங்குவது எமது கடமையாகும்.

பாடுபட்டு உழைத்த உங்கள் பணத்தை செலுத்துவதற்கு முன்னர், நீங்கள் மேற்கொள்ளும் முதலீட்டு தீர்மானங்கள் பற்றி மீள்பரிசீலனை செய்வதற்கு சிறிது நேரத்தை ஒதுக்குங்கள். தொடர்வதற்கு முன்னர் இத்திட்டங்களின் சட்டபூர்வத் தன்மையை முழுமையாக விசாரணை செய்வது முக்கியமானதாகும்.

**உங்களை பாதுகாத்துக்கொள்வதற்கான பொதுவான குறிப்புக்கள்:**

1. **தகவலை அறிந்திருங்கள்:** பொதுவான மோசடிகள் பற்றியும் அவற்றின் தன்மைகள் பற்றியும் அறிந்திருங்கள். அறிவே உங்களது சிறந்த பாதுகாப்பாகும்.

2. **உறுதிப்படுத்துங்கள்: உறுதிப்படுத்துங்கள்: உறுதிப்படுத்துங்கள்:** ஏதேனும் செயற்பாட்டை அல்லது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் வழங்கல்கள், பொருட்கள் அல்லது பணிகளின் சட்டபூர்வத் தன்மையை எப்போதும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

3. **தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்திடுங்கள்:** தெரியாத நபர்கள் அல்லது நிறுவனங்களுடன் உங்களின் தனிப்பட்ட அல்லது நிதியியல் தகவல்களை எப்போதும் பகிரவேண்டாம். சட்டபூர்வமான நிறுவனங்கள் கோரப்படாத இத்தகவல்களை கேட்க மாட்டா.

4. **பாதுகாப்பான கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்துங்கள்:** இணையவழியில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்போது, பாதுகாப்பனதும் நன்மதிப்புபெற்ற கொடுப்பனவு முறைகளைப் பின்பற்றவும். தெரியாத கொடுக்கல்வாங்கல்களுக்கு கம்பி மாற்றல் அல்லது முற்கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

5. **உங்கள் உள்ளுணர்வுகளை நம்புங்கள்:** உண்மையாக இருக்க முடியாதது என்று அல்லது சந்தேகத்திற்கிடமானது என்று தோன்றுகின்றபட்சத்தில், உங்கள் உள்ளுணர்வை நம்பி, மேலும் விசாரணையை மேற்கொள்ளுங்கள்.

6. **சந்தேகத்திற்கிடமான நடவடிக்கை தொடர்பில் அறிக்கையிடுங்கள்:** நீங்கள் சாத்தியமான மோசடியொன்றை எதிர்கொண்டிருப்பீர்களாயின் அல்லது நீங்கள் மோசடியொன்றினால் பாதிக்கப்பட்டிருப்பின், நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் உள்ளூர் பொலிஸ் போன்ற பொருத்தமான அதிகாரிகளுக்கு முறைபாட்டை மேற்கொள்ளவும்.

7. **ஏனையவர்களுக்கு அறிவூட்டுங்கள்:** உங்களின் நண்பர்களும் குடும்பத்தவர்களும் இது தொடர்பில் விழிப்புடனும் பாதுகாப்புடனும் இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதவற்கு இத்தகவல்களை அவர்களுக்கு பகிர்ந்துகொள்ளுங்கள்.

உங்களின் நிதியியல் பாதுகாப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். விழிப்பு கவனத்துடனும் தகவலறிந்தவராகவும் இருப்பதன் மூலம், நிதியியல் மோசடிகளுக்கு பலியாகாமல் உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் நீங்கள் பாதுகாத்திட முடியும். இது தொடர்பில் உங்களுக்கு ஏதேனும் கரிசனை இருக்கும்பட்சத்தில் அல்லது உதவி தேவைப்படும்பட்சத்தில், தகவல்களுக்கு நிதியியல் உளவறிதல் பிரிவு அல்லது உள்ளூர் பொலிஸ் நிலையத்தை அணுகுவதற்கு தயவுசெய்து தயங்காதீர்கள்.

அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாப்பனதும் மிகவும் தீங்கற்ற நிதியியல் சூழலை உருவாக்குவோம்.

**தொடர்புகளுக்கு**


தொலைபேசி : +94112 477509 (குரல்), +94765 200290 (வட்ஸ்அப்)

மின்னஞ்சல் : dfiu@cbsl.lk

முகவரி : நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி.இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

வலைத்தளம் : www.fiusrilanka.gov.lk